முருகப்பெருமான் துணை

**மகான் இராமலிங்க சுவாமிகள் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.12.2023**, செவ்வாய்கிழமை

1. வையகம் காத்தருள வேண்டி
வடிவேலனார் ஞானமோடு
தயவு கூட்டி தவசியாக வந்த
தயாபரனே ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சிலை திங்கள்
ஈரைந்து திகதி குசனார் வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 10 ம் நாள், 26.12.2023, செவ்வாய்கிழமை)
இயம்பிடுவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை இராமலிங்க சுவாமிகளும்
அருளுவேன் உலகநலம் பெற
வாசிவென்ற ஞானியர் படை
வலம்வந்து அரங்கன் குடிலின்
4. அரங்கன் குடிலின் தருமம் தன்னை
அளவிலா காத்தருள்புரிய
வரங்கள் தரும் அன்னதான
வள்ளல் பலம் கொண்ட சேவை
5. சேவைதனில் கலியுக மக்கள்
சேர்ந்து தொண்டாற்றியே
சேவை வளர பொருளுதவியை
செய்துமே ஆசிதனை பெற
6. ஆசிபெற அருளாற்றல் பலம்
அறத்தின் பலமாகக் கிட்டி
வாசியோக பிற யோகங்களை
வள்ளல் பெருமான் என் ஆசிபட

7. ஆசிபட தானாக உள்விளங்கி
அறத்தின் வழி அடைவரப்பா
ஆசிதந்து இதுநாள் தன்னில்
அரங்கன் வழி யானே வரம் தர

8. வரம்தர முழுமதி நன்னாளில்
வணங்கி மக்கள் வந்து
அறம்தனில் உதவி நிற்பதுடன்
அருள்ஞான தீட்சை ஏற்க

9. ஏற்கவே இந்தவித நாளில்
என்பலம் மக்கள் அடைந்து
அற்புதமாய் ஞான தேர்ச்சி
அழியாமை தரும்படி வரம் அடைவர்

10. அடையவே அவரவர் தனக்கும்
ஆத்ம ஞான சித்தி கூடி
தடை இடர் உலகியல் வழி
தவறுகள் தனை மாற்றி

11. மாற்றியே ஞானத் தலைமையை
மகான்கள் துணை கண்டிட
ஆற்றல்பட ஞான ஆட்சியாக
அமைத்துமே உலகினில் சிறப்பர்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—